(☎ 04175 - 236654 / 235295

SHANMUGA INDUSTRIES
ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

21.06.2022

# திருவண்ணாமலை சண்முகா கல்லூரியில் சர்வதேச யோகா தின விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி நாட்டுநலப்பணித் திட்டமும், அகத்தர உறுதிக்குழுவும் (IQAC) திருவண்ணாமலை சாய் சேவா யோகா இயற்கை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையமும் இணைந்து சர்வதேச யோகா தின விழாவினைக் கொண்டாடினர். கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வரவேற்புரை வழங்கினார். கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** முன்னிலை வகித்தார். பொருளாளர் **எம்.சீனுவாசன்,** கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் **த.விநாயகம்** நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திருவண்ணாமலை சாய் சேவா யோகா இயற்கை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் முதன்மை மருத்துவர் **ப.எழில்மாறன்** அவர்கள் தமது குழுவினருடன் கலந்துகொண்டுச் சிறப்புரையாற்றியதோடு, யோகா பயிற்சியினையும் வழங்கினார். கொரோனாவிற்குப் பிறகான பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். நுரையீரல் அழற்சி, மனச்சோர்வு, குடல்சம்மந்தமான பாதிப்பு, தசை அழற்சி உள்ளிட்டவற்றைச் சரிப்படுத்துவதற்கான எளிய வழிமுறைகளை வழங்கினார். அதோடு தனிமனித இடைவெளியும், முகக்கவசமும், தடுப்பூசியும் பாதுகாப்பிற்கு அவசியம் என விளக்கினார்.

நிகழ்ச்சியின் நிறைவில் கல்லூரியின் ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியரும், நாட்டுநலப்பணித்திட்ட அலுவலருமான **ம.பன்னீர்செல்வன்** நன்றியுரையாற்றினார். கணினிப்பயன்பாட்டியல் துறை உதவிப்பேராசிரியரும், நாட்டுநலப்பணித் திட்ட அலுவலருமான **டி.அருண்குமார்** நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரிப் பேராசிரியர்கள், அலுவலகப்பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செயலர் மற்றும் தாளாளர்


சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
மணலூர்பேட்டை சாலை, திருவண்ணாமலை– 606 603.
நாட்டு நலப்பணித் திட்டம் & IQAC
சர்வதேச யோகா தின விழா - 2022
தேதி : 21.06.2022, இடம் : கலையரங்கம்
மருத்துவர் ப.எழில் மாறன் அவர்கள்